??????? ?? ?????? ??????? ?????????? ??????? ??????? ??????? ????? ?????????!

புதிய பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில், கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அதில் இலங்கையில் பொலிஸ் மா அதிபரின் வகிபாகம் இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பேணுதல், பொது மக்களுக்குப் பாதுகாப்பை வழங்குதல் போன்ற பொறுப்புகளுடன் நேரடியாகத் தொடர்புடைய மிகவும் முக்கியமான பங்கு என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அந்தவகையில் தற்போதைய பொலிஸ் மா அதிபர் சந்தன டி. விக்கிரமரத்னவுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்பு ஜூன் 26, 2023 அன்று முடிவடையவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பதவிக்கு பரிந்துரைக்கப்பட்ட பெயர்களில், மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிதுந்த ஜயவர்தன மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோர் உள்ளனர் எனப் பல்வேறு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன பணிப்பாளராக கடமையாற்றிய போதே ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இத்தாக்குதலில் கத்தோலிக்க திருச்சபை மற்றும் ஏனைய சமூகங்களைச் சேர்ந்த பெரும்பான்மையான அப்பாவி மக்கள் உயிர்களையும் அவயவங்களையும் இழந்தனர்.

எனவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புதிய பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டுமென ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள குறித்த கடிதத்தில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

?????????????? ???? ??????????? ???????????

முல்லைத்தீவில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், போரால் பாதிக்கபட்ட தமிழ் மக்களிடையே, அது மற்றுமொரு மனித புதை குழியாக இருக்கலாமோ என்கிற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக இன்று அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

நீர்வழங்கலுக்கான குழாய்களை பொருத்தப்படுவதற்காக வேலைகள் இடம்பெற்றுகொண்டிருந்த போதே மனித எச்சங்கள் கிடந்துள்ளன.

“ சம்பவ இடத்தில் ஒன்றோ அல்லது இரண்டோ அல்ல, அதைவிட கூடுதலான மனித எச்சங்களை காண

முடிவதாகவும் அறிய முடிகிறது,

இந்த மனித எச்சங்கள் நேற்று வியாழக்கிழமை (29) கொக்குத்தொடுவாய் மத்தியில் அமைந்துள்ள பாடசாலையிலிருந்து கொக்கிளாயை நோக்கி சுமார் 200 மீட்டர் தொலைவில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் குடிநீர் வழங்கலுக்கான குழாய் பொருத்துவதற்காக தோண்டிய குழியிலேயே இவை காணப்பட்டுள்ளன.

மனித புதை குழிகள் தொடர்பில் ஐந்து மனித உரிமை அமைப்புகள் இணைந்து அண்மையில் வெளியிட்ட கடுமையான அறிக்கையால் ஏற்பட்ட்ட அதிர்ச்சியிலிருந்து நாடு இன்னும் மீளாத நிலையில், மற்றுமொரு குழியில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டு;ள விவகாரம் பேசுபொருளாக மாறியுள்ளது.

இவ்வாறு மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டமை தொடர்பில் கொக்கிளாய் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், இது தொடர்பில் முல்லைத்தீவு நீதவானின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளததாக பொலிஸார் கூறுகின்றனர். நீதிமன்ற உத்தரவை அடுத்து மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பொலிஸ் தரப்பு கூறுகிறது.

“அந்த இடத்தில் உடைகளின் சில பகுதிகளும், எலும்புக்கூடுகளும் காணப்பட்டன. உடைகளில் பெண்களின் ஆடைகளும் இருந்தன எனவும் அவற்றை காணும்போது அவை விடுதலைப் புலிகளுடையதாக இருக்கக் கூடும் எனவும் தோன்றுகிறது என்றும் 2-3 மீட்டர் அளவிலான பகுதியில் அந்த உடல் எச்சங்கள் காணப்பட்டன எனவும் அந்த எலும்புகூடுகள் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டது போலத் தெரிகிறது” எனவும் கூறப்படுகிறது,

இந்த மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் முல்லைத்தீவிலிருந்து சுமார் 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. எனினும் இந்த இடம் ‘மாவீரர் துயிலும் இல்லம் இல்லை’ என்பதை உறுதியாக கூற முடியும் எனவும் கூறப்படுகிறது.

“இந்த பகுதியிலிருந்த மக்கள் 1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் வாரம் அங்கிருந்து வெளியேறினர். அவர்கள் 2011ஆம் ஆண்டே மீள்குடியமர்த்தப்பட்டனர். மேலதிகமாக தோண்டப்படும் போதும் கூடுதல் உடல் எச்சங்கள் கிடைக்கலாம்”.

உள்நாட்டு யுத்தம் 2009 ஆண்டு மே மாதம்19ஆம் திகதி ரத்தக்களறியுடன் முடிவடைந்த நிலையில், ஆயிரக்கணக்கான தமிழர்கள் அரச படையினரிடம் சரணடைந்தனர், அல்லது கையளிக்கப்பட்டனர் அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர்.

அவர்களை கண்டுபிடிக்க ஒரு அலுவலகம் 2016ஆம் ஆண்டு நாடாளுமன்ற தீர்மானம் ஒன்றின் மூலம் அமைக்கப்பட்டாலும், காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடும் அந்த அலுவலகம் இதுவரை அவ்வகையில் காணாமல்போன ஒருவரைக் கூட கண்டுபிடிக்கவில்லை. அந்த அலுவலகமும் ஐ நா மனித உரிமைகள் பேரவையின் பிரதி ஆணையாளரின் கடும் விமர்சனத்திற்குள்ளானது.

ஜூன் மாதம் 21 ஆம் திகதி ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் நிலவும் மனித உரிமைகள் தொடர்பான நிலை குறித்த தனது வாய்மொழியான அறிக்கையில் பிரதி ஆணையாளர் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தை குறை கூறியிருந்தார்.

இதேவேளை பிரான்ஸ் 24 தொலைக்காட்சிக்கு நேர்காணல் ஒன்றை அளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

இலங்கையில் தென்னாபிரிக்கா போன்று உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படுவதாகவும், போர் குற்றங்கள் தொடர்பான அனைத்து குற்றச்சாட்டுகளையும் அந்த அமைப்பு விசாரிக்கும் எனவும் தெரிவித்துள்ளார். அந்த ஆணைக்குழுவில் சர்வதேச மேற்பார்வையாளர்களும் உள்ளடங்குவார்கள் ரணில் கூறியுள்ளார்.

ஆனால் மனித உரிமை செயற்பாட்டாளர்களோ, விடுதலைப் புலிகளுடனான இறுதிகட்ட யுத்தம் மற்றும் கடந்த 1980களில் சிங்கள இளைஞர்களின் எழுச்சியை ஒடுக்கியபோது இடம்பெற்ற பாரிய குற்றங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகள் மீதான விசாரணைகளை மூடி மறைக்கவே இந்த ஆணைக்குழு அமைக்கப்படுகிறது என அஞ்சுகின்றனர்.

இப்போது கொக்குத்தொடுவாயில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், இது தமது உறவுகளை தேடுபவர்களின் அச்சத்தையும் கவலையையும் மேலோங்கச் செய்துள்ளது. கடந்த 2,300 நாட்களுக்கு மேலாக பெண்கள் தலைமையிலான அமைதிவழி போராட்டம் தமது சொந்தங்களை தேடி தொடர்ச்சியாக நடைபெறுகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என்ற ஒற்றை பதிலைக் கோரியே அந்த போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது.

?????????????? ?????????? ?????? ???????? !

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மத்தியில் பச்சை சீருடைகள், பெண்களின் உள்ளாடைகள் என்பனவற்றுடன் பல்வேறு மனித எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன. இது மற்றொரு மனிதப் புதைகுழியா என்ற சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் 20 புதைகுழிகளை இனங்கண்டு 5 அமைப்புகள் அறிக்கை வெளியிட்டு சில நாள்களின் பின்னர்

முல்லைத்தீவில் மேலும் ஒரு மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீரவழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பை மேற்கொள்வதற்காக கனரக இயந்திரம் கொண்டு நிலத்தை தோண்டியபோதே மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கொக்கிளாய் பொலிஸாருக்கு இது தொடர்பில் தகவல் தெரிவிக்கப்பட்டது. அது பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டது. நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக இன்று அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படும் என்று தெரியவருகின்றது.

?????????? ???? ???????? – ??????? ???????????

யாழ்ப்பாணம் – அராலி, வட்டுக்கோட்டை வீதியில் கல்லுண்டாய் வெளி பகுதியில் இன்று நண்பகல் இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்தில் வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த , 37 வயதான மகேஸ்வரன் மயூரன் என்பவரும் அராலி மத்தியைச் சேர்ந்த 29 வயதான ஜெயசுந்தரம் சரோஜன் என்பவரும் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

?????????? ????????????????? ??????? ???????? ?????? ???????? ???????????? : ???????????!

உழைக்கும் வர்க்கத்தினரின் நிதியை இல்லாது செய்ய நாம் ஒருபோதும் இணங்கப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கும் விசேட அமர்வு ஒன்று, மத்திய வங்கியின் ஆளுநரினால் நடத்தப்பட்டது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், “மத்திய வங்கியின் ஆளுநர், இது தொடர்பான தகவல்களை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நாம் ஆராய வேண்டும். எமக்கு கிடைத்துள்ள தகவலுக்கு அமைவாக, உள்நாட்டுக் கடன்

மறுசீரமைப்பினால், ஊழியர் சேமலாப நிதியமே பாதிக்கப்படும் என்று தெரியவந்துள்ளது.

இவ்வாறு இதனை மேற்கொள்வதுதான் சரியான செயற்பாடு என்று ஆளுநர் கூறினாலும், நாம் இதனையிட்டு மகிழ்ச்சியடைய முடியாது.

உழைக்கும் வர்க்கத்தினரின் நிதியை இல்லாது செய்ய நாம் ஒருபோதும் இணங்கப் போவதில்லை. இது தொடர்பான முழுமையான தகவல்களை வழங்குவதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு இதனால் பாதிப்பொன்று ஏற்படாது என்றே அரசாங்கம் இதுவரை கூறிவந்தது.

இந்த நிலையில், தற்போது இதற்கு முரணாக செயற்படுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைய முடியாது. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படக் கூடாது என்பதே எமது கொள்கையாகும்” என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Theepachchelvan’s Article Sheds Light on the Perpetual Struggle of Displacement: The Plight of Sri Lankan Refugees

In an insightful article in Namathu Eelanadu monthly, titled “We Are Still Becoming Refugees: The Perpetual Struggle of Displacement,” Mr. Theepachchelvan draws attention to the ongoing challenges faced by refugees and highlights the specific plight of Sri Lankan refugees, particularly the Eelam Tamils. With International Refugee Day serving as a timely reminder, the article emphasizes the urgent need for global collaboration to address the root causes of displacement and ensure the fair treatment and safe return of refugees.

The article points out that the causes of forced displacement, such as racism, political strife, religious conflicts, violence, poverty, and unemployment, continue to fuel the refugee crisis. Despite the efforts of organizations like the United Nations and its refugee agency (UNHCR), the number of displaced individuals worldwide continues to rise. Sri Lanka, even after a decade since the end of the war, continues to experience waves of displacement due to conflicts and political pressures.

Mr. Theepachchelvan highlights the distressing situation faced by Sri Lankan refugees, including those residing in refugee camps across different countries. In Tamil Nadu, India, approximately one hundred thousand Tamil individuals seek asylum in refugee camps, while an estimated forty thousand unregistered refugees face additional hardships exacerbated by the economic crisis and the recent COVID-19 pandemic. The article calls on the Tamil Nadu government to recognize these individuals as temporary refugees and provide necessary support.

The author further highlights the challenges faced by Eelam Tamils residing in Australian refugee camps, where the constant threat of deportation looms. These individuals fled their homeland due to various forms of peril, including the confiscation of their lands and belongings, leaving them stateless. The article emphasizes the impossibility of their return, given the prevailing threats and lack of a safe environment.

The article stresses that the struggle of Eelam Tamils has endured for three decades, resulting in increased numbers seeking refuge in Tamil Nadu and European countries. It emphasizes the deep yearning and dreams of Eelam Tamils for justice and the liberation of their motherland, using their refugee existence as a weapon to prevent future generations from enduring a similar fate.

Mr. Theepachchelvan’s article underscores the need for immediate action to address the plight of refugees globally. It calls for governments and societies to work together to restore refugee rights, ensure fair treatment, and create a compassionate and inclusive world where forced migration becomes a thing of the past. By recognizing and actively working towards resolving the suffering of refugees, we can move towards a future where no individual is left behind, and the devastating experience of being a refugee is eradicated.

Theepachchelvan (born 24 October 1983) is an Eelam poet, writer and freelance journalist. He has written important poems about the war in the fourth phase and continues to record the life of the wetland in his poems. Widely known at a very young age, he is considered one of the most powerful voices of our time.

Recognizing the Genocide in Sri Lanka: Uncovering the Truth of 2009

- SUKIRTHAN

A call has been made to the United Kingdom urging the country to officially acknowledge the genocide that took place against the Tamil population in Sri Lanka in 2009. Advocates are also requesting British intervention to establish a political solution in Sri Lanka through a referendum. In a recent conference held in Britain, human rights lawyer Patrick Lewis led discussions on the ongoing structural genocide and the persistence of systemic racism in the Tamil homeland. The event, which took place in a special hall of the British Parliament, saw the participation of political activists from the Tamil homeland, British political leaders from various parties, and British Tamil activists.

During the conference, Rev. Thavathiru Velan Swamy, the coordinator of the People's Revolution Movement, and VSS Dhananjayan, a lawyer and civil society activist, delivered compelling speeches highlighting the ethnic hatred prevalent in the Tamil homeland in Sri Lanka and proposed approaches for an international resolution. Ms. Kisani delivered a welcoming speech on behalf of British Tamil Youth, and Selvan Sarveen delivered a special address.

Prominent Members of Parliament and Ministers who attended the conference, including Mr. John MacDonald MP, Mr. Virendra Sharma MP, Sir Ed Davey MP, the leader of the Liberal Democrats, Ms. Sarah Jones MP, Shadow Minister of State for Police and the Fire Service, Mr. Sam Tarry MP, and Mr. Gareth Thomas MP, Shadow Minister for International Trade, expressed their commitment to push for a resolution on the issue in Parliament.

V.S.S. Dhananjayan, the lawyer and civil society activist, drew attention to the ongoing militarization, Buddhistization, and land encroachments in the Tamil homeland in the North East. He highlighted that despite 14 years passing since the end of the war, the presence of the military in the region remains significant, with one soldier for every two civilians. He also emphasized that soldiers not only occupy private lands but also engage in agriculture, exerting immense pressure on the local population. Dhananjayan further criticized the construction of a Buddhist temple on Kurundur hill, which violated a court order from Mullaitivu, and accused government agencies of biased operations in the North-East, particularly citing the arbitrary actions of the Archaeological Authority.

Rev. Thavathiru Velan Swamy, a conference participant from Thailand, delivered a keynote speech condemning the systematic ethnic cleansing taking place in the name of Buddhistization in the North East. He revealed that individuals, including Members of Parliament and religious leaders, are arbitrarily arrested without court warrants if they advocate for Tamil rights in the region. Rev. Swamy called upon British MPs to intervene and halt the genocide being perpetrated in the Tamil homeland under the guise of Buddhistization. He also urged the UK to follow Canada's example and officially recognize that the Sri Lankan government committed genocide against the Tamil population in their homeland. Human rights barrister Mr. Patrick Lewis and human rights activist Janani Demokram, Director Chair of Together Against Genocide, also addressed the conference.

Following the conference, Rev. Thavathiru Velan Swamy emphasized that a lasting solution for the Tamil population can only be achieved through a plebiscite, and he urged Britain to take necessary steps in this regard. He also asserted that the events of May 2009 constituted a genocide against the Eelam Tamils and called for recognition of this fact by the UK government.

Geneva: The Dismaying State of Victims' Families

The Editorial of Namathu Eelanadu Monthly – June 2023

The 53rd Session of the United Nations Human Rights Council is scheduled to commence on July 19th and conclude on July 14th. During this session, on Wednesday the 21st, at 3 pm Geneva time (6.30 pm Sri Lanka time), High Commissioner for Human Rights, Volker Derk, presented an oral report on the human rights situation in Sri Lanka.

This report assessed the progress made in terms of reconciliation, accountability, economic

crisis, and corruption scandals, as outlined in Resolution 51(1) titled 'Promoting Reconciliation, Accountability and Human Rights in Sri Lanka'. While concerns were voiced by member states, it is unlikely that any new resolutions will be passed on Sri Lanka.

The composition of the Sri Lankan delegation has changed since the last session, with Himali Arunathilaka, the Permanent Resident Representative of Sri Lanka in Geneva, leading the current delegation. These developments suggest that Sri Lanka is not giving due attention to this issue.

Furthermore, it appears that Western countries, including the United States, will not take significant measures against the present government led by Ranil. As usual, various political leaders, affected parties, and diaspora organizations will likely attend side events, representing the affected side.

Regrettably, it is unlikely that substantial progress will be made beyond these actions, not only in this session but also in the foreseeable future. This essay explores the reasons behind this stagnation and its potential consequences.

The absence of new resolutions against Sri Lanka indicates a reluctance among member states to exert strong pressure on the country. Despite concerns being expressed, no concrete measures are expected to be taken. The international community's hesitance to address the ongoing issues highlights the limited effectiveness of the United Nations Human Rights Council in enforcing change.

During the last session, a delegation led by Minister of Foreign Affairs Ali Sabri and Minister of Justice Vijayadasa Rajapaksa represented Sri Lanka. However, the current delegation is led by the Permanent Resident Representative of Sri Lanka in Geneva, Himali Arunathilaka. This shift in representation suggests a lack of priority given to the matter by the Sri Lankan government. It also implies that the government led by Ranil is unlikely to face significant consequences for its actions.

Considering the current political landscape, it is highly probable that the Ranil-led government will maintain its position of power. Even if a change in leadership were to occur, the new government would likely align itself with America, India, and Western nations. This underscores the dominance of global politics exerted by these powerful players. Consequently, the Geneva Conference serves merely as a forum for affected parties seeking justice, with little hope for substantial resolution.

The persistence of this situation is likely to lead to an impasse, rendering the dilution of matters even more challenging. Victims and those seeking justice may face frustration and a sense of hopelessness as their concerns go unresolved. Without substantial action and accountability, the pursuit of reconciliation and human rights in Sri Lanka will remain stagnant, perpetuating a cycle of injustice and suffering.

The 53rd Session of the United Nations Human Rights Council in Geneva presents a disheartening picture regarding victim relations in Sri Lanka. The lack of international pressure, political dynamics, and the foreseeable future dominated by similar circumstances contribute to the perpetuation of a dire situation.

The Geneva Conference, although providing a platform for affected parties to voice their concerns, is unlikely to yield significant outcomes beyond this symbolism. As a result, a troubling impasse may ensue, prolonging the suffering and hindering progress towards reconciliation and human rights in Sri Lanka.

NAMATHU EELANADU – E-PAPER -JUNE 2023

நமது
ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 03 மலர் 34 ஜூன் 2023 மின்னஞ்சல்:: contact@namathueelanadu.com இணையம்:: www.namathueelanadu.com
Simply Scan the QR code Your Phone Camera
Download the NamathuEelanadu app
"எமது சொந்தப் பலத்தில் நாம் வேரூன்றி நிலையாக நிற்பதால் மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்து கொடாமல் தலைநிமிர்ந்து நிற்கமுடிகின்றது"
- தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்
2300 நாட்களைக் கடந்து...
கொடுப்பனவுகளை கொடுப்போம் என்று சொல்வது கொலை செய்த கதையை மறைக்கவே !
ඔබ රැගෙන ගිය අපේ දරුවන් කොහේද?
கொலைகாரனால் நீதி வழங்க முடியுமா ??

புதைகுழிகளும் வெற்றியடையாத அகழ்வுப் பணிகளும்

https://youtu.be/XzPeQP0SMJo

சிறிலங்காவிலுள்ள மனிதப் புதைகுழிகளும் வெற்றியடையாத அகழ்வுகளும்

???? ??????????? ???????? ?????????????
???????????

கடந்தகால பிரச்சினைகளை தீர்த்துவைப்பதில் சிறிலங்கா அரசு சிரத்தையாக இருக்குமாயின் சிறிலங்காவிலுள்ள பாரிய மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் அனைத்திலும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் இருப்பதை உறுதிசெய்ய வேண்டுமென சிறிலங்காவிலுள்ள காணாமல் போன குடும்பங்களுடன் இணைந்து பணியாற்றும் 5 குடியியல் சமூகக் குழுக்கள் கூட்டாக தெரிவித்துள்ளன.

தென்னாபிரிக்காவை தளமாகக் கொண்ட இயங்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்திற்கான அமையம் (ITJP), இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடக அமையம் (JDS) மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி மையம் (CHRD) மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் அமைப்பு (FOD) ஆகிய மனித உரிமைகள் அமைப்புக்கள் இணைந்து சிறிலங்காவிலுள்ள பாரிய மனிதப் புதைகுழிகளும் வெற்றியடையாத அகழ்வுகளும் எனும் தலைப்பில் இலங்கையில் மூடிமறைக்கப்படும் பாரிய மனித புதைகுழிகள் பற்றிய ஆய்வு அறிக்கை ஒன்றை இன்று வெளியிட்டிருந்தனர்.

இதில் இலங்கைத்தீவ முழுவதிலும் உள்ள பாரிய மனித புதைகுழிகளை தோண்டி ஆய்வு செய்வதில் இலங்கை தொடர் தோல்விகளை சந்தித்து வருவதுடன் கடந்த மூன்று தசாப்தங்களாக வெறும் 20மனித புதைகுழிகளே தோண்டப்பட்டுள்ளன. அதேவேளை இதுவரையில் எந்த குடும்பத்திற்கும் தங்களது அன்புக்குரியவர்களது மனித எச்சங்கள் கிடைக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளதுடன் சிறிலங்காவில் அமைக்கப்பட்ட ஏராளமான விசாரணை ஆணைக் குழுக்களில் ஒன்றுகூட பாரிய மனிதப் புதைகுழிகளை விசாரணை செய்வதற்கான ஆணையைக் கொண்டிருக்கவில்லை. மாறாக, உண்மையை வெளிக்கொண்டு வரும் முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. நீதிபதிகளும், தடயவியல் நிபுணர்களும் திடீர் இடமாற்றங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர், நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றுவதை காவல்துறை தாமதப் படுத்தியுள்ளது, குடும்பங்களின் சட்டவாளர்கள் புதைகுழிகள் உள்ள இடங்களுக்குப் போவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது, தற்போதும் உயிருடன் உள்ள சாட்சிகளைக் கண்டறிவதற்கு எந்தவொரு முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதையும் விளக்கி நிற்கின்றது.

இந்நிலையிலலேய இக் கூட்டறிக்கையை வெளியிட்ட மேற்படி மனித உரிமைகள் அமைப்புக்கள் சிறிலங்கா

அரசாங்கத்திற்கு முக்கிய பரிந்துரைகளை விடுத்துள்ளன. அதில அதில் பாரிய மனித புதைகுழி அகழ்வுகளை மேற்கொள் சட்டத்தினையும் கொள்கையினையும் இயற்றுதல் முன்மொழியப்பட்டுள்ள சட்டக் கட்டமைப்பு, கொள்கை, மற்றும் பாரிய மனிதப் புதைகுழிகள் மீதான நியம செயற்பாட்டு நடைமுறைகள் என்பன தொடர்பாக, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இதர சர்வதேச வல்லுனர்கள் உட்பட, வெளிப்படையான ஆலோசனை செயற்பாடு ஒன்றினை மேற்கொள்ளுதல் பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பானது உள்ளிட்ட நாட்டிலுள்ள தடயவியல் ஆய்வுத்திறனை மேம்படுத்தல். 'தேவையான நிபுணத்துவம் கிடைக்கும் வரை' அகழ்வுப் பணிகளை இடை நிறுத்துவதற்காக காணாமற்போனவர்கள் மீதான அகில இலங்கை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் சட்டமா அதிபர் அலுவகத்தை மீள்கட்டமைப்புச் செய்தல், சுயாதீன வழக்குத்தொடரும் சேவையொன்றினை உருவாக்கி, அகழ்வுப் பணிகளின் முடிவுகள் தொடர்பான வழக்குகள் விசாரணைகள் சுயாதீனமாகவும் பக்கச்சார்பற்ற முறையிலும் இடம்பெறுகின்றன என்பதை உறுதிப்படுத்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்துள்ள.

இதனிடையே இன்று வெளியாகியுள்ள மனித புதைகுழிகள் தொடர்பான கூட்டறிக்கை குறித்து கருத்து தெரிவித்த ITJP யின் நிறைவேற்று பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா, 30 ஆண்டுகள் கடந்த நிலையிலும் உண்மையை கண்டறிவதற்காகவும் நீதியை பெறுவதற்காகவும் நாங்கள் போராடிக்கொண்டிருக்க வேண்டிய நிலையிலேயே இருக்கின்றது. பெரும் அட்டூழியங்களில் ஈடுபட்ட கோத்தபாய ராஜபக்ஷ உட்பட்டவர்கள் உடனடியாகவே பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தால் உள்நாட்டுப் போரில் நடந்த பாரிய அட்டூழியங்களும் தண்டனை விலக்களிப்புக்களும் தவிர்க்கப்பட்டிருக்கும். பொறுப்புக்கூறல் என்பது ஒரு விருப்பத் தெரிவான நடைமுறையல்ல. மாறாக சிறிலங்காவின் அனைத்து மக்களதும் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு இது அவசியமானதாகும் என்று தெரிவித்தார்.


Duraiyappah stadium, Jaffna district
Chemmani, Jaffna district
Mirusuvil, Jaffna district
Kilinochchi, Kilinochchi district
Ganeshapuram, Kilinochchi district
Puthukkudiyiruppu, Mullaitivu district
Mullaitivu, Mullaitivu district
Mannar, Mannar district
Thiruketeeswaram, Mannar district
Angkumbura, Kandy district
Nikawaretiya, Kurunegala district
Matale, Matale district
Walpita Government Farm, Minuwangoda, Gampaha district
Essella, Gampaha district
Wavulkelle, Nittambuwa, Gampaha District
Hokandara, Colombo district
Bolgoda lake, Colombo district
Kaluwanchikudy, Batticaloa district
Wilpita, Akuressa, Matara District
Sooriyakanda, Ratnapura district


JOINT PRESS RELEASE:
FAMILIES OF THE
DISAPPEARED FROM ALL
COMMUNITIES IN SRI
LANKA DEMAND ACTION
ON MASS GRAVES
VISITOR

இலங்கைத்தீவ முழுவதிலும் உள்ள பாரிய மனித புதைகுழிகளை தோண்டி ஆய்வு செய்வதில் இலங்கை தொடர் தோல்விகளை சந்தித்து வருவதுடன் கடந்த மூன்று தசாப்தங்களாக வெறும் 20 மனித புதைகுழிகளே தோண்டப்பட்டுள்ளன. அதேவேளை இதுவரையில் எந்த குடும்பத்திற்கும் தங்களது அன்புக்குரியவர்களது மனித எச்சங்கள் கிடைக்கவில்லை என்பது தொடர்பாக சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்திற்கான அமையம் (ITJP) இன்று வெளிட்ட கூட்டறிக்கையை தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நேரில் சென்று கையளித்தனர்.

தென்னாபிரிக்காலை தளமாகக் கொண்ட இயங்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்திற்கான அமையம் (ITJP), இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடக அமையம் (JDS) மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி மையம் (CHRD) மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் அமைப்பு (FOD) ஆகிய மனித உரிமைகள் அமைப்புக்கள் இணைந்து இலங்கையில் மூடிமறைக்கப்படும் பாரிய மனித புதைகுழிகள் பற்றிய ஆய்வு அறிக்கை ஒன்றை இன்று வெளியிட்டிருந்தனர்.

பாரிய புதைகுழிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிநிற்கும் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சார்பில் வெளியான இந்த அறிக்கையில் சிறிலங்காவில் நடந்த மோதலின் பல்வேறு காலப்பகுதியைச் சேர்ந்த பாரிய மனிதப் புதைகுழிகளை சிறிலங்கா எவ்வாறு கையாண்டது என்பதையும் பல்லாயிரக்கணக்கான சடலங்கள் நாடாளாவிய ரீதியிலுள்ள புதைகுழிகளில் இன்னமும் புதையுண்டுதான் கிடக்கின்றன என்பதையும் எடுத்துக் கூறுகின்றது.

அதேவேளை, சிறிலங்காவில் அமைக்கப்பட்ட ஏராளமான விசாரணை ஆணைக் குழுக்களில் ஒன்றுகூட பாரிய மனிதப் புதைகுழிகளை விசாரணை செய்வதற்கான ஆணையைக் கொண்டிருக்கவில்லை. மாறாக, உண்மையை வெளிக்கொண்டு வரும் முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. நீதிபதிகளும், தடயவியல் நிபுணர்களும் திடீர் இடமாற்றங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர், நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றுவதை காவல்துறை தாமதப் படுத்தியுள்ளது, குடும்பங்களின் சட்டவாளர்கள் புதைகுழிகள் உள்ள இடங்களுக்குப் போவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது, தற்போதும் உயிருடன் உள்ள சாட்சிகளைக் கண்டறிவதற்கு எந்தவொரு முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதையும் விளக்கி நிற்கின்றது.

அதேவேளை இவ்வறிக்கையினை எழுதிய அமைப்புக்கள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு 4 முக்கிய

பரிந்துரைகளை விடுத்துள்ளன. அதில் பாரிய மனித புதைகுழி அகழ்வுகளை மேற்கொள் சட்டத்தினையும் கொள்கையினையும் இயற்றுதல் முன்மொழியப்பட்டுள்ள சட்டக் கட்டமைப்பு, கொள்கை, மற்றும் பாரிய மனிதப் புதைகுழிகள் மீதான நியம செயற்பாட்டு நடைமுறைகள் என்பன தொடர்பாக, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இதர சர்வதேச வல்லுனர்கள் உட்பட, வெளிப்படையான ஆலோசனை செயற்பாடு ஒன்றினை மேற்கொள்ளுதல் பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பானது உள்ளிட்ட நாட்டிலுள்ள தடயவியல் ஆய்வுத்திறனை மேம்படுத்தல். 'தேவையான நிபுணத்துவம் கிடைக்கும் வரை' அகழ்வுப் பணிகளை இடை நிறுத்துவதற்காக காணாமற்போனவர்கள் மீதான அகில இலங்கை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் சட்டமா அதிபர் அலுவகத்தை மீள்கட்டமைப்புச் செய்தல், சுயாதீன வழக்குத்தொடரும் சேவையொன்றினை உருவாக்கி, அகழ்வுப் பணிகளின் முடிவுகள் தொடர்பான வழக்குகள் விசாரணைகள் சுயாதீனமாகவும் பக்கச்சார்பற்ற முறையிலும் இடம்பெறுகின்றன என்பதை உறுதிப்படுத்தல். ஆகிய கோரிக்கைளை முன்வைத்துள்ள.

இந்நிலையிலேயே இன்று வெளியாகிய சிறிலங்காவிலுள்ள மனித புதைகுழிகள் தொடர்பான மேற்படி கூட்டறிக்கையை தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நேரில் சென்று கையளித்துள்ளனர்.

இந்த சந்திப்புக்களின் போது இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பாகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் பாரிய மனித புதைகுழிகள் தொடர்பான விடயங்களை பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெளிவுபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வு அறிக்கையை பெற்றுக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புலம்பெயர் உறவினர்களின் வேதனைகளை அக்கறையுடன் கேட்டதுடன் மேலும் இவ்விடயம் தொடர்பாக தாங்கள் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்புவதாகவும் வாக்களித்தனர்.

இந்நிகழ்வில் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரித்தானியா வாழ் உறவினர்களின் சங்கத்தின் சார்பில் விஜய் விவேகானந்தன், டிலக்சன் மேனோரஜன், லக்ஷ்மன் திருஞானசம்பந்தர், நிலக்ஜன் சிவலிங்கம், சாருப்பிரியன் ஸ்ரீஸ்கரன், புகழினியன் விக்டர் விமலசிங்கம், மாதவ மேஜர் வேலுப்பிள்ளை, ரோய் ஜக்ஷான் யேசுதாசன், சுபதர்ஷா வரதராசா, சுபமகிஷா வரதராசா ரஞ்சனி பாலச்சந்திரன், செல்வகுமாரி லோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.